


புதுகை **வரலாறு** நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ பிப்ரவரி. 27, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 144 ❖ ரூ.10

### திருவப்பூர் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்ற காளை கவிநாடு கண்மாயில் சிக்கி

# உயிரிழப்பு

## மாவட்ட நிர்வாகம் மெத்தனம் - தண்ணீரில் தத்தளித்த இளைஞர்களையும் மற்ற காளைகளையும் தீயணைப்பு துறையினர் மீட்டனர்





**புதுக்கோட்டை, பிப். 27–**

**புதுக்கோட்டை மாவட்டம் திருவப்பூர் கவிநாடு கண்மாயில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் வாடிவாசல் களத்தை விட்டு வெளியேறிய காளைகள் அருகே உள்ள கண்மாய் தண்ணீருக்குள் புகுந்த நிலையில் ஒரு காளை நீரில் மூழ்கி உயிரிழந்தது.மேலும் தண்ணீருக்குள் சிக்கிய இரண்டு காளைகளையும் இரண்டு இளைஞர்களையும் தீயணைப்பு துறையினர் துரிதமாக செயல்பட்டு மீட்டனர்.**

புதுக்கோட்டை மாவட்டம் திருவப்பூர் முத்துமாரியம்மன் கோயில் பூச்சொரிதல் திருவிழாவை முன்னிட்டு நேற்று காலை 8 மணிக்கு தொடங்கிய ஜல்லிக்கட்டு போட்டி மாலை 4மணியளவில் நிறைவடைந்தது.இதில் மொத்தம் 900 காளைகள் வாடிவாசலில் இருந்து சீறி பாய்ந்த நிலையில் 300 மாடிப்படி வீரர்கள் களத்தில் நின்று காளைகளை அடக்கினார். இந்த போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை முறையாக மேற்கொள்ளாததால் தண்ணீருக்குள் 20க்கும் மேற்பட்ட காளைகள் புகுந்த நிலையில் அதில் ஒரு காளை பரிதாபமாக உயிரிழந்தது.

புதுக்கோட்டை மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற அம்மன் கோயில்களில் ஒன்றாக திகழும் திருவப்பூர் முத்துமாரியம்மன் கோயிலின் பூச்சொரிதல் விழாவை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி எப்போதும்நடைப்பெறும் கவிநாடு கண்மாயில் மிக விமரிசியாக தொடங்கியது. போட்டியை தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கொடியசைத்து தொடங்கி வைத்த நிலையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட 900 காளைகள் வாடிவாசலில் இருந்து ஒன்றன்பின் ஒன்றாக அவிழ்க்கப்பட்டது.

வாடிவாசலில் இருந்து சீறி பாய்ந்து வரும் காளைகளை 300 மாடுபிடி வீரர்கள் சுழற்சி முறையில் களமிறங்கி போட்டி போட்டுக் கொண்டு அடக்கிய காட்சிகளும் அடக்க முயன்ற காட்சிகளும் பார்வையாளர்களை பரவசப்படுத்தியது. இதனிடையே காளைகள் வெளியேறும் பகுதியான கலெக்சன் பாயிண்டில் முறையான தடுப்புகள் அமைக்கப்படாததால் காளைகள் இடது புறம் உள்ள கவிநாடு கண்மாய் நீருக்குள் புகுந்ததால் காளைகளும் அதன் உரிமையாளர்களும் தண்ணீர் நீந்தியவாரே சென்ற காட்சி காண்பதற்கு வேதனையை ஏற்படுத்தியது. இதனிடையே முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கரின் ஒரு காளை உட்பட 4 காளைகள் மற்றும் இரண்டு இளைஞர்கள் கண்மாய் தண்ணீரில் சிக்கிக்கொண்டு தத்தளித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வந்த புதுக்கோட்டை மாவட்ட தீயணைப்பு அலுவலர் பானுப்பிரியா தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் ரப்பர் படங்கள் மூலம் கண்மாய்க்குள் இறங்கி தண்ணீரில் தத்தளித்த இரண்டு இளைஞர்கள் மற்றும் மூன்று காளைகளை உயிருடன் மீட்டனர். தண்ணீரில் சிக்கிக்கொண்ட கடுக்காக்காடு கிராமத்தைச் சேர்ந்த சந்திரன் என்பவரது காளை நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இதன் பின்பு மாலை நாலு மணி அளவில் ஜல்லிக்கட்டு போட்டி நிறைவடைந்ததாக விழா குழுவினரால்



அறிவிக்கப்பட்டது. இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகள் பாய்ந்ததில் 55 பேர் காயமடைந்தனர்.அதில் படுகாயம் அடைந்த ஆறு பேர் மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்திலேயே அதிக ஜல்லிகட்டு போட்டிகள் நடைபெறும் மாவட்டமான புதுக்கோட்டையில்நேற்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததால் காளைகள் மற்றும் அதனைப் பிடிக்கச் சென்ற காளைகளின் உரிமையாளர்கள் கண்மாய் தண்ணீருக்குள் சிக்கி தவித்த காட்சி பெரும் வேதனையை ஏற்படுத்திய நிலையில் இனிவரும்போட்டிகளில் இது போன்ற தவறுகள் நடக்காமல் முறையான ஏற்பாடுகள் செய்து போட்டியை நடத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜல்லிக்கட்டு அலுவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், இந்திய கால்நடை நல வாரிய ஜல்லிக்கட்டு ஆய்வுக் குழுத் தலைவர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் எஸ். கே.மிட்டல், இந்திய கால்நடை நல வாரிய ஜல்லிக்கட்டு ஆய்வுக் குழு உறுப்பினர் டாக்டர். ஆயூப்கான், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் சம்பத், வட்டாட்சியர் விஜயலெட்சுமி, அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**திமுக ஆட்சியிலும் கொள்ளை**

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை 122 வது வட்ட மாமன்ற உறுப்பினரும், திமுக தலைமை செயற்குழு உறுப்பினருமான ஷீபா வாசு நினைவேந்தல் நிகழ்ச்சியில் அவரது படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் அமைச்சர்கள் பொன்முடி, சுப்பிரமணியன், சேகர்பாபு, மேயர் பிரியா நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, எம்எல்ஏக்கள் வேலு, கருணாநிதி, துணை மேயர் மகேஷ்குமார், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## திருப்பூர் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ .2 லட்சம் நிவாரணம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை பிப்.27–

சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ .2 லட்சம் நிவாரணம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

திருப்பூர்சாலைவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ .2 லட்சம் நிவாரணம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் , திருப்பூர் மாவட்டம், காங்கேயம் அருகே பயணிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த சரக்கு வாகனம் எதிர்பாராதவிதமாக கவிழ்ந்ததில் சரோஜா. க/பெ. நாச்சிமுத்து (50), பூங்கொடி க/பெ. கோவிந்தராஜன் (48). கிட்டுசாமி, த/பெ.நாச்சி (45) மற்றும் தமிழரசி த/பெ.குணசேகரன் (17) ஆகியோர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடன். செய்தித்துறை அமைச்சர் சாமிநாதனை உடனடியாக விபத்தில் பாதிக்கப் பட்டவர்களைச் சந்தித்து, ஆறுதல்



கூறி அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திட அனுப்பிவைத்துள்ளேன். மேலும், இவ்விபத்தில் படுகாயமடைந்து. தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள பழனி, த/பெ.குமரன் (50), வளர்மதி க/பெ.சுதாகரன் (26), இந்துமதி, க/பெ.குணசேகரன் (23) மற்றும் காயத்ரி, த/பெ.சரவணன் (12) ஆகியோருக்கு சிறப்பான சிகிச்சை அளிக்க அறிவுறுத்தினேன். மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என கூறப்பட்டுள்ளது.



புதுக்கோட்டையில் இந்து அறநிலையத்துறை சார்பில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் அறங்காவலர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நேற்று பதவி ஏற்று கொண்டனர். அருகில் எம்எல்ஏ முத்துராஜா வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், டிஆர்ஓ செல்வி, நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில், அறங்காவலர் குழு தலைவர் தவ பாஞ்சாலன், அறங்காவல் குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விக்கிரவாண்டி அருகே பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை குற்றவாளிகளை பிடிக்க 4 தனிப்படைகள் அமைப்பு

விழுப்புரம் பிப்.27–

விழுப்புரம் அருகே பள்ளி மாணவனை சரமாரியாக தாக்கியதுடன், மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி அருகே உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்றில் 12-ஆம் வகுப்பு படிக்கும் மாணவனும், மாணவியும் அருகில் உள்ள பெருமாள் கோவிலுக்கு நேற்று முந்தினம் மாலை சாமி கும்பிட சென்றுள்ளனர். பின்னர் அருகில் உள்ள வயல்வெளி பகுதியில் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். இரவு நேரம் தொடங்கும் வேளையில், அப்பகுதி வழியாக பைக்கில் சென்ற 3 பேர், தனிமையில் பேசிக் கொண்டிருந்த மாணவன் , மாணவியை கண்டனர். அவர்களின் அருகில் சென்ற அந்த கும்பல், மாணவரைச் சரமாரியாக தாக்கியதுடன், அவர்களில் ஒருவர் மாணவியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

பின்னர் அந்த கும்பல், மாணவி அணிந்திருந்த தங்க செயின், பணம் முதலியவற்றை பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். இருவரும் நிலை குலைந்து போய் உள்ளதை கண்ட அப்பகுதியை சேர்ந்தவர்கள் உடனடியாக இருவரையும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இதையடுத்து இருவரின் பெற்றோருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.இந்தசம்பவம் தொடர்பாக காவல்துறையினர் மாணவியிடம் இருந்து தகவல்களைபெற்றனர்.மாணவி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் விழுப்புரம் காவல்துறையினர் 7 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து 4 தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை வலை வீசி தேடி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## உக்ரைனுக்கு ராணுவ உதவி வழங்கிய போலாந்திற்கு கச்சா எண்ணெய் விநியோகத்தை நிறுத்திய ரஷ்யா

ரஷ்யா பிப்.27–

உக்ரைன் மீது ரஷ்ய போர்தொடுத்து ஓராண்டு நிறைவடைந்துவிட்டது. போர் இன்று 369-வது நாளை எட்டியுள்ளது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. உக்ரைனுக்கு தேவையான ஆயுத உதவியை வழங்கிவரும் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. ரஷ்யா-உக்ரைன் அமைதி பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும் என்று இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் ஆயுத உதவியால் இந்த போர் பல மாதங்களாக நீடித்து வருகிறது. இதனிடையே, ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு ஏற்கனவே 4 ராணுவ டாங்கிகளை அனுப்பி வைத்துள்ளதாகவும், மேலும் ஆயுதங்களை விரைவில் வழங்க உள்ளதாகவும் போலாந்து பிரதமர் மெடூசி மொரவிஹி கடந்த வெள்ளிக்கிழமை கூறினார். அதேபோல், கடந்த சில நாட்களுக்கு முன் போலாந்துக்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அங்கிருந்து ரகசியமாக ரயிலில் உக்ரைன் தலைநகர் கீவ் சென்றார். அவரது கீவ் பயணம் உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், போலாந்திற்குவழங்கிவந்த கச்சா எண்ணெய் விநியோகத்தை ரஷ்யா நேற்று அதிரடியாக நிறுத்தியுள்ளது. துர்ஷா பைப்லைன் வழியாக விநியோகிக்கப்பட்டு வந்த கச்சா எண்ணெய் விநியோகத்தை ரஷ்யா நேற்று நிறுத்தியுள்ளதாக போலாந்து எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. போரில் உக்ரைனுக்கு ராணுவ டாங்கி வழங்கியதற்கு பதிலடியாக போலாந்திற்கு கச்சா எண்ணெய்விநியோகத்தை நிறுத்தியுள்ளது. ரஷ்யாவின் இந்த அதிரடி நடவடிக்கையால் போலாந்தில் கச்சா எண்ணெய்விலைஉயரும்என எதிர்பார்க்கப்படுகிறது.

## பள்ளிகளில் நவீன வசதிகளுடன் கூடிய ஸ்மார்ட் வகுப்பறைகள் – சென்னை மாநகராட்சி தகவல்

சென்னை பிப்.27–

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் ஆகியவை இணைந்து ''சென்னை பள்ளிகளில் முழுமையான மாற்றம்'' என்ற அடிப்படையில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு, கற்பித்தல் முறை, ஆசிரியர்களின் பயிற்சி, விளையாட்டு மற்றும் இதர வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை பள்ளிகளில் உள்ள 10 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் வகுப்பறைகளில் ஸ்மார்ட் போர்டு, ஆசிரியர்களுக்கு மடிக்கணினி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய மேசைகள், ஒரு ஆண்டுக்கு இணையதள வசதி, வண்ணமயமான ஓவியத்துடன் கூடிய



வகுப்பறைகள் ஆகியவற்றை அமைத்திட ரூ.56 லட்சத்து 60 ஆயிரத்து 100 மதிப்பீட்டில் மற்றும் பெருநிறுவன சமூக பங்களிப்பு நிதியில் ரூ.28 லட்சத்து 87 ஆயிரத்து 500 மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பள்ளிகள், பூங்காக்கள் மற்றும் மருத்துவமனைகளை மேம்படுத்த விரும்பும் பெரு நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் வட்டார துணை ஆணையர்கள் மற்றும் மண்டல அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு சென்னை மாநகராட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

# இன்று

27-2-2023

மிளகு இஞ்சி அரைத்து சாப்பிட அஜீரண கோளாறுகள் நீங்கும்

சக வருடம் 1944 பால்குன 08

சுபகிருது மாசி 15 | FEB - MON திங்கள் | ஷ'.பான் 6 | வளர்பிறை 058 / 307

வளர் அஷ்டமி 60.00 (முழுவதும்) கார்த்திகை 08.43 (கா.09.58) தியாஜ் 51.03 அகஸ் 29.24 மரண 08.43 மேல் அமிர்த. கரிநாள். மதுரை கூடலழகர் கள்ளர் திருக்கோலமாய் காட்சி. காங்கேயநல்லூர் முருகப் பெருமான் பூத வாகன பவனி. திருச்செந்தூர் முருகப்பெருமான் பூங்கோயில் சப்பர பவனி.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 6.30-7.30 | 9.30-10.30 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; கும்ப லக்கனம் இருப்பு நா. 2 வி. 32; சந்திராஷ்டமம் சுவாதி; கரணம் : 9-10.30; சூரிய உதயம் : 6.29

நிழலின் அருமை வெயிலில் தெரியும்

இராசிபலன்: மேஷம் - இன்பம்; ரிஷபம் - செலவு; மிதுனம் - தெளிவு; கடகம் - உதவி; சிம்மம் - ஆர்வம்; கன்னி - பயம்; துலாம் - சிக்கல்; விருச்சி - பரிவு; தனுசு - பாசம்; மகரம் - நம்பிக்கை; கும்பம் - மேன்மை; மீனம் - பாசம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# ஏ.மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லத்திற்கு அன்பு உள்ளத்தின் சார்பில் நலத்திட்ட உதவி



புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் ஏ.மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லத்தில் அன்பு உள்ளத்தின் சார்பில் ரூ.40,600 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில் பணியாற்றி ஓய்வுப்பெற்ற பணியாளர்கள் சார்பில் நடத்தப்படுகின்ற அன்பு உள்ளங்கள் சார்பாக ஏ.மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லத்திற்கு தங்களால் முடிந்த அளவிற்கு உதவிடும் வகையில் ஐந்து மின்விசிறிகள், எக்ஸ்டென்ஷன் ஃபேன் இரண்டு, ஸ்டீல் ட்ராக் 2, சமையல் பாத்திரங்கள் மற்றும் ரொக்க தொகை ரூபாய் ஐந்தாயிரம் உள்ளிட்டவைகள் வழங்கும் நிகழ்ச்சி வள்ளலார் மாணவர் இல்லத்தில்நடைப்பெற்றது.

கூட்டத்தில் இல்லத்தின் தலைவர் மரு.ச.ராமதாஸ் கலந்து கொண்டு அன்பு உள்ளத்தின் உறுப்பினர் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி, அவர்களின் சேவையை வெகுவாக பாராட்டியதோடு, ஓய்வுகாலத்தில் சமுதாய அக்கறையுடன்செயல்படும் அனைவரையும், குடும்ப உறுப்பினர்களை வாழ்த்தியும்பாராட்டியும் பேசினார். கூட்டத்தில் புதுக்கோட்டை பெரியார் நகர் பாலகிருஷ்ணன்கொடைத் தன்மையையும் நினைவு கூர்ந்தும் பேசினார். (மாணவர் இல்லத்திற்கு மாதந்தோறும் ரூ.1000/ நன்கொடை அளித்து வருகிறார்) செயலர் சு.கருப்புசாமி, பொருளாளர் ஆர். முனிசாமி, டி.கே. சண்முகசுந்தரம் (இ.சி) சி.ஆர்.குப்புசாமி, எஸ்.கை.பார்த்தசாரதி மற்றும் கே.இராவணன் கலந்துகொண்டனர்.

# அறந்தாங்கி அருகே மஹா சிவராத்திரி விழாவை முன்னிட்டு எல்கை மாட்டுவண்டி பந்தயம்

அறந்தாங்கி பிப்.27–

அறந்தாங்கி அருகே கூத்தங்குடி ஸ்ரீ லண்டன் முனீஸ்வரர் திருக்கோயில் மஹா சிவராத்திரி விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே கூத்தங்குடி ஸ்ரீ லண்டன் முனீஸ்வரர் திருக்கோயில் மஹாசிவராத்திரி விழாவை முன்னிட்டு முதலாம் ஆண்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது. போட்டியில் மதுரை, திருச்சி,தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட மாட்டுகள் வண்டிகள் போட்டியில் கலந்து கொண்டனர். இதில் பெரியமாடு, சிறியமாடு, என இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் இரண்டு பிரிவுகளிலும் 50 க்கும் மேற்பட்ட இரட்டை மாட்டு வண்டிகள் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட பந்தைய இலக்கினை நோக்கி ஒன்றையொன்று முந்திச்சென்றன. போட்டியில் வெற்றி பெற்று இரண்டு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களை பிடித்த மாட்டின் உரிமையாளர்களுக்கு மொத்தம் ரூ.2 லட்சம் ரொக்கப்பரிசும் கோப்பைகளும் வழங்கப்பட்டது.

பந்தைய நிகழ்ச்சியை சாலையின் இரு புறமும் நின்று ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கண்டு ரசித்தனர். பாதுகாப்பு பணியில் நாகுடி போலீசார் ஈடுபட்டனர்.




# ஆண்டிமடம் அருகே கிராம நிர்வாக அலுவலர் பணியிடை நீக்கம்

அரியலூர் பிப்.27–

ஆண்டிமடம் அருகே கிராம நிர்வாக அலுவலர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், திருக்களப்பூர், கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துவரும் கி.பொற்செல்வி என்பவர், சிட்டா அடங்கல் வழங்குவதற்கு, விவசாயிகளிடமிருந்து ரூ.1000/– லஞ்சம் கேட்பதாக, வீடியோ ஆதாரம் வர பெற்றதைத் தொடர்ந்து, திருக்களப்பூர் கிராம நிர்வாக அலுவலர் கி.பொற்செல்வி, தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என, மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி தெரிவித்துள்ளார்.

# சென்னையில் கணவர் தற்கொலை செய்ததை அறிந்த மனைவியும் தற்கொலை

சென்னை பிப்.27–

குடும்பத் தகராறில் ஒரு மாதமாக பிரிந்து வாழ்ந்து வந்த கணவர் விஷம் குடித்து தற்கொலை செய்ததை அறிந்த மனைவியும் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.



சென்னையை அடுத்த புழல் அண்ணா நினைவு நகரை சேர்ந்தவர் பழனி(47). இவர், சென்னை சூளைமேட்டில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இவருடைய மனைவி சங்கீதா(35). கணவன்–மனைவி இடையே குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு எண்ணூர் மகளிர் காவல் நிலையத்தில் இருவரும் இனிமேல் சேர்ந்து வாழப் போவதில்லை என எழுதி கொடுத்துவிட்டு வந்தனர். அதன்பிறகு சங்கீதா, செங்குன்றத்தை அடுத்த நல்லூர் ஊராட்சிக்கு உட்பட்ட சோலையம்மன் நகர் கட்டபொம்மன் தெருவில் உள்ள தாய் வீட்டிலும், பழனி புழலில் உள்ள வீட்டிலும் தனித்தனியாக வசித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த வெள்ளி கிழமை மாலை புழல் அம்பத்தூர் சாலையில் மழைநீர் கால்வாய் அருகே பழனி விஷம் குடித்து தற்கொலை செய்த நிலையில் பிணமாக கிடந்தார். புழல் போலீஸ் இன்ஸ்பெக்டர் சண்முகம் மற்றும் போலீசார் அவரது தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரித்து வந்தனர். இதற்கிடையில் கணவர் தற்கொலை செய்த தகவல் அறிந்ததும் அதிர்ச்சி அடைந்த சங்கீதா, நேற்று முந்தினம் மாலை தனது தாய் வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலைசெய்துகொண்டார். இதுபற்றி சோழவரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெகநாதன் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

# ஆவுடையார் கோவில் கால்நடை மருத்துவமனையில் விழிப்புணர்வு முகாம்

ஆவுடையார்கோவில் பிப்.27–

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி கோட்டம், ஆவுடையார் கோவில் கால்நடை மருத்துவமனையில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், வீட்டில் வளர்க்கும் பிராணியான வளர்ப்பு நாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி மற்றும் விழிப்புணர்வு முகாம் நேற்று காலை 10 மணியளவில் நடைபெற்றது. முகாமை ஆவுடையார் கோவில் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரா ராஜமாணிக்கம் மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர் செந்தில்குமரன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.முகாமில் கிராம நிர்வாக அலுவலர்கள்,கிராம உதவியாளர்கள் மற்றும் 100–க்கும்மேற்பட்ட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



நிகழ்ச்சியில் செல்ல வளர்ப்பு பிராணிகளுக்கு டாக்டர் முத்து துரை மற்றும் டாக்டர் செல்வம் ஆகியோருடன் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் சங்கர் மற்றும் சேகர் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவினர்கள் செல்ல பிராணிகளுக்கு வெறி நோய் தடுப்பூசி செலுத்தினார்கள். மேலும் மருத்துவர்கள் நாய் வளர்ப்பவர்களிடம் நாய் வளர்ப்பு முறைகளையும் தடுப்பூசியின் நன்மைகளையும் எடுத்துக் கூறினார்கள். முன்னதாக நிகழ்ச்சி துவங்கிய பின் வெறி நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் விதத்தில் தற்காப்பு கலை பயிலும் மாணவர்களுக்கு தற்காப்பு கலை பயிற்றுநர் சரவணன் முன்னிலையில் தற்காப்பு குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்.

# சேலம் பேருந்து நிலையத்தில் முதியவரிடம் இருந்து ரூ.62 லட்சம் பணம் பறிமுதல்

சேலம் பிப்.27

சேலம் பேருந்து நிலையத்தில் முதியவரிடம் இருந்து கட்டுக்கட்டாக பணம் பறிமுதல் செய்யப்பட்டன.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் இன்று நடைபெற உள்ளது. இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியான அடுத்த நிமிடமே தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துவிட்டன. தேர்தலில் பொதுமக்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் 4 நிலை கண்காணிப்பு குழு, 3 பறக்கும் படை அமைக்கப்பட்டு அவர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சேலம் பேருந்து நிலையத்தில் நேற்று முதியவர் ஒருவர் நின்றுள்ளார். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவலர்கள் சந்தேகத்தின் பேரில் முதியவரை பிடித்து விசாரித்தனர். அப்போது அவர் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்துள்ளார். தொடர்ந்து காவலர்கள் நடத்திய விசாரணையில் முதியவரிடம் ரூ.62 லட்சம் பணம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அந்த பணத்தை பறிமுதல் செய்து முதியவரிடம் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரியலூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

அரியலூர் பிப்.27–

அரியலூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



அரியலூர் பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, அக்கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளர் எம். இளங்கோவன் தலைமை வகித்தார்.

மத்திய அரசு அறிவித்துள்ள பட்ஜெட்டில், விவசாயிகளுக்கு வழங்கி வந்த உர மானியம், உணவு மானியம் நிறுத்தப்பட்டது, கிராமப் பகுதிகளில், விவசாய தொழிலாளர்களை பாதுகாத்து வரும் 100 நாள் வேலை திட்டத்திற்கு, வெறும் 60 ஆயிரம் கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கி உள்ளதை கண்டிப்பதுடன், போதுமான நிதியை ஒதுக்கிட வேண்டும் என கோரிக்கை விடுப்பது. எல் ஐ சி, வங்கிகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை மோசடி செய்த, அதானியை கைது செய்ய வேண்டும். அவரது சொத்துக்களை முடக்கிட வேண்டும். மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிதி ஒதுக்கீடு செய்யாததை கண்டித்தும், உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கி பாதுகாத்திட, மத்திய பட்ஜெட்டில் எந்த அறிவிப்பும் இல்லாததை கண்டித்தும் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், கட்சியின் மாநில குழு உறுப்பினர் எஸ். வாலண்டினா பேசினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கிருஷ்ணன், மணிவேல், வெங்கடாசலம், பரமசிவம், கந்தசாமி, அம்பிகா உள்ளிட்டோர் பேசினார்கள். கட்சி நிர்வாகிகள் பத்மாவதி, குமார், அருணாச்சலம், அர்ச்சுனன் மலர்கொடி, அருண்பாண்டியன், சந்தானம், புனிதன், சாமிதுரை, ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பலர், பங்கேற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தின் முடிவில், அருணன் நன்றி கூறினார்.

# கோடியக்கரை அருகே தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் – 3 பேர் படுகாயம்

காரைக்கால் பிப்.27–

கோடியக்கரை தென்கிழக்கு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளது.



தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, கைது செய்வது என இலங்கை கடற்படை வழக்கமாக வைத்துள்ளது. இதற்கு பல்வேறு கண்டங்கள் எழுந்த நிலையிலும், இதுபோன்ற சம்பவங்கள் நடந்து வருகிறது. இந்த நிலையில், காரைக்காலில் இருந்து மீன் பிடிக்க காரைக்கால், மயிலாடுதுறை மீனவர்கள் 11 பேர் நேற்று முந்தினம் சென்றனர். நேற்று கோடியக்கரை தென்கிழக்கு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் 11 மீனவர்கள் படகில் இருந்த நிலையில் 7 பேரை கடலில் தள்ளி சித்திரவதை செய்துள்ளனர். மேலும் 4 மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்தியதுடன் மீனவர்களை கடலில் தள்ளி வலைகள், ஜி.பி.எஸ் கருவிகள் உள்ளிட்டவைகளை பறிமுதல் செய்ததாக கூறப்படுகிறது. இந்த தாக்குதலில் 3 மீனவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்கள் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இலங்கை கடற்படை நடத்திய தாக்குதல் சம்பவம் குறித்து மீனவர்களிடம் போலீசார் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இலங்கை கடற்படையினரின் இதுபோன்ற தொடர் சம்பவங்களுக்கு மத்திய அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று மீனவர்கள் சார்பில் வலுத்த கோரிக்கை எழுந்துள்ளது.

# ஜம்மு காஷ்மீர் புல்வாமாவில் ஒருவர் பயங்கரவாதிகளால் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர் பிப்.27–

ஜம்மு காஷ்மீர் புல்வாமாவில் நேற்று பயங்கரவாதிகளால் சுடப்பட்டு காயமடைந்த பொதுமக்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பயங்கரவாதிகள் பண்டிட் சமூகத்தை சேர்ந்த நபரை சுட்டுக் கொன்ற நிலையில் ராணுவத்தினர் தீவிர பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். ஜம்மு–காஷ்மீரில் சிறுபான்மையினராக உள்ள இந்து மதத்தினரான பண்டிட் சமூகத்தினரை குறிவைத்து தொடர்ந்து பயங்கரவாத தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்று வருகிறது. பயங்கரவாத தாக்குதலை தடுக்க பாதுகாப்பு படையினர் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் பண்டிட் சமூகத்தை சேர்ந்தவரை பயங்கரவாதிகள் நேற்று காலை சுட்டுக்கொன்றனர். அச்சென் பகுதியை சேர்ந்த சஞ்சய் சர்மா(40) என்ற நபர் நேற்று சந்தை பகுதிக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அவரை இடைமறித்த பயங்கரவாதிகள் சஞ்சய் சர்மாவை துப்பாக்கியால் சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த சஞ்சய் சர்மாவை மீட்ட அங்கிருந்தவர்கள் அவரை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சஞ்சய் சர்மாவை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக அறிவித்தனர். பயங்கரவாத தாக்குதல் குறித்து தகவலறிந்து பாதுகாப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பியோடிய பயங்கரவாதிகளை தீவிரமாக தேடி வருகின்றனர். காஷ்மீரில் பண்டிட்களை குறிவைத்து மீண்டும் பயங்கரவாத தாக்குதல் அரங்கேறியுள்ளதால் ஜம்மு–காஷ்மீரில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# பாரத் ஜோடோ யாத்திரையின் போது விவசாயிகளின் வலியை உணர்ந்தேன் – ராகுல் காந்தி பேச்சு

*சத்தீஷ்கர் பிப்.27–*

*பாரத் ஜோடோ யாத்திரையின் போது விவசாயிகளின் வலியை உணர்ந்தேன் என்று ராகுல் காந்தி கூறினார்.*



*சத்தீஷ்கர் மாநிலம், நவராய்ப்பூரில் காங்கிரஸ் கட்சியின் 85–வது மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. 3 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் வரும் நாடாளுமன்ற தேர்தல், கூட்டணி உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. காங்கிரஸ் தலைவர் மல்லிகர்ஜுன கார்கே தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர்களான சோனியா காந்தி, ராகுல் காந்தி, கட்சி நிர்வாகிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.*

*இந்நிலையில், காங்கிரஸ் மாநாட்டின் இறுதி நாளான நேற்று ராகுல் காந்தி பேசினார். நிகழ்ச்சியில்பேசியராகுல் காந்தி, பாரத் ஜோடோ யாத்திரையில்நான்நிறைய விஷயங்களை கற்றுக் கொண்டேன். எனது நாட்டிற்காக காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நான் நடைபயணம் மேற்கொண்டேன். யாத்திரையின் போது என்னுடனும், கட்சியுடனும் ஆயிரக்கணக்கானோர் இணைந்தனர். பாரத் ஜோடோ யாத்திரையின் போது விவசாயிகளின் அனைத்து பிரச்சினைகளையும் கேட்டேன். அவர்களின் வழியை உணர்ந்தேன்' என்றார்.*

# காங்கேயம் அருகே வேன் மீது லாரி மோதிய விபத்தில் 3 பெண்கள் உள்பட 5 பேர் பலி

காங்கேயம் பிப்.27–

காங்கேயம் அருகே லாரி மோதி வேன் தலைகுப்புற கவிழ்ந்த விபத்தில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் அருகே வாலிபனங்காடு பகுதியில் லாரி மோதி வேன் தலைக்குப்புற கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 3 பெண்கள் உள்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 30–க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காவல்துறையினர் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கொடுமுடி மகுடேஸ்வரர் கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்பும்போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குடும்பத்துடன் கொடுமுடியில் திதி கொடுத்து விட்டு வீடு திரும்பிய போது விபத்தில் 5 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

# வேலூர் மண்டலம் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் பேருந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு

வேலூர், பிப். 27 -

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் வேலூர் மண்டலம் சார்பில் பேருந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு வேலூர் மண்டல மேலாளர் தலைமையில் கொடியசைத்து துவங்கப்பட்டது.

பேருந்துகளில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சார்ந்த பதாகைகள் ஒட்டப்பட்டிருந்தது. இந்த விழிப்புணர்வு வாகனம் கண்களை கவரும் வகையில் போக்குவரத்து விதிமுறை குறியீடுகள் வடிவமைக்கப்பட்டிருந்தது.



இந்த வாகனத்தில் சாலையில் வாகனம் ஓட்டும்போது கடைபிடிக்க வேண்டிய போக்குவரத்து, சாலை விதிமுறை வழிகாட்டு நெறிமுறைகள், பாதுகாப்பாக வாகனங்களை இயக்குவது, அதன் குறியீடுகள், நிற விளக்குகள் குறித்த போக்குவரத்து விழிப்புணர்வு படங்களுடன் வடிவமைக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் நகர எல்லைகளில் இந்த பேருந்தானது பொது விழிப்புணர்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த வாகனத்தை பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், பணிப்பெண்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள், இளைஞர்கள் என பலர் இந்த விழிப்புணர்வு வாகனத்தில் எழுதப்பட்டிருந்த குறியீடுகள், அமைக்கப்பட்டிருந்த சிக்னல் விளக்குகளை படித்து பார்வையிட்டனர். இந்த விழிப்புணர்வின்போது மாவட்ட, மண்டல போக்குவரத்து துறை அதிகாரி மற்றும் போக்குவரத்து ஓட்டுநர், ஆய்வாளர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உடனிருந்தனர்.



▶ வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பள்ளிகொண்டா பேரூராட்சி 4 வது வார்டு மண்டப தெரு, பஜனை கோயில் தெரு, சாலை இணைப்பு கால்வாய் ஆறு மாதமாக பழுதாகி ஆபத்தான நிலையில் உள்ளது. இந்த வழியாக அவசரத்திற்கு ஆம்புலன்ஸும் செல்ல முடியாத நிலை உள்ளது. இந்த தெருவின் அருகே ரேஷன் கடை உள்ளதால் ரேஷன் பொருட்கள் இயற்றி வரும் வாகனங்கள் சிரமப்பட்டு வருகின்றன. ஆபத்தான சூழ்நிலையில் பள்ளி குழந்தைகள் பயணிக்கின்றனர். இரவு நேரங்களில் அதிகப்படியான விபத்துக்கள் ஏற்படுகிறது எனவும் உடனடியாக இந்த இணைப்பு சாலை கால்வாய் பணியை தரமான முறையில் அமைத்து தர சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கும் இப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# வேலூர் அணைக்கட்டு ஒடுகத்தூரில் போலி மருத்துவர் கைது: மருத்துவமனைக்கு சீல்

வேலூர், பிப்.27 -

வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் கிராமத்தில் பெருமாள் என்பவர் போலி மருத்துவர் என புகார்கள் வந்ததையடுத்து, அணைக்கட்டு வட்டாட்சியரின் தலைமையில் யுவராஜ் கிளினிக் என்ற பெயரில் நடத்தி வந்த மருத்துவமனையில் திடீர் விசாரணையை மருத்துவ துறையினர் மேற்கொண்டனர்.

விசாரணையில் பொதுமக்களுக்கு காயம், காய்ச்சல் போன்றவற்றிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், சுமார் 2 வருடமாக கிளினிக் நடத்தி வருவதாகவும் பெருமாள் தெரிவித்தார். ஸ்டெதாஸ்கோப், ரத்த அழுத்தம் பரிசோதனை கருவி, ஆங்கில மருந்து, மாத்திரைகள் மற்றும் மருந்து செலுத்தும் ஊசிகள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன.



இதையடுத்து யுவராஜ் கிளினிக் மூடி சீல் வைக்கப்பட்டது. இந்த அதிரடி சோதனையில் மண்டல துணை வட்டாட்சியர், ஒடுகத்தூர் உள்வட்ட வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர்கள் மற்றும் ஒடுகத்தூர் சுகாதார நிலைய ஆய்வாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

இது குறித்து வட்டார மருத்துவ அலுவலருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதுபோன்ற போலி மருத்துவர்கள் ஒடுகத்தூரில் இன்னமும் இருவர் இருப்பதாக பொதுமக்கள் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

# வேலூர் ஸ்ரீபுரம் தங்க கோயிலில் சரஸ்வதி யாகத்தில் வைக்கப்பட்ட எழுதுகோல் மாணவ, மாணவிகளுக்கு வழங்கும் விழா

வேலூர், பிப். 27 -

வேலூர் மாவட்டம், அரியூர் அடுத்த திருமலைக்கொடி ஸ்ரீ தங்கக் கோயிலில் சக்தி அம்மா சரஸ்வதி யாகத்தில் வைக்கப்பட்ட எழுதுகோலை மாணவ, மாணவிகளுக்கு வழங்கும் விழா நடைபெற்றது.

இத்திருத்தலத்தில் ஸ்ரீபுரம் நாராயணி பீடத்தில் எஸ்எஸ்எல்சி, பிளஸ் 1, பிளஸ் 2 போன்ற பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவிகள் வெற்றி பெறவும், ஸ்ரீ மேத்தா யாகம் என்ற ஸ்ரீ சரஸ்வதி யாகம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில், ஹைகோர்ட் நீதிபதி சிவஞானம், வேலூர் முதன்மை கல்வி அலுவலர் முனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சிக்கு சக்தி அம்மா தலைமை தாங்கி சரஸ்வதி பூஜையில் வைக்கப்பட்ட எழுதுகோல்களுக்கு சிறப்பு பூஜைகள் செய்து மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார். அவர் பேசுகையில், மாணவர்களாகிய உங்களுக்கு பிடித்த சினிமா ஹீரோ ஒருவராவது இருப்பார். ஆனால் அவர்கள் நிஜத்தில் ஹீரோ இல்லை. நீங்கள் தான் நிஜ ஹீரோ. தன்னை போல் மற்றவர்களையும் உயர்த்த நினைப்பவர்கள் யாரோ, அவர்கள்தான் நிஜ ஹீரோ. இந்த சமுதாயத்தில் கல்வி மட்டுமே ஒருவரை வாழ்வின் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும். கல்வியால் மட்டுமே வறுமையை ஒழிக்க முடியும். இந்த தேசத்தை காக்க முடியும். நன்மை செய்ய முடியும். அந்த சந்தர்ப்பம் உங்களுக்கு தற்போது கிடைத்துள்ளது. நேரத்தை வீணடிக்காமல் நீங்கள் எல்லோரும் நன்றாக படிக்க வேண்டும் என்றார்.

நல்ல முறையில் படித்து வாழ்க்கையில் நிஜ ஹீரோவாக வர வேண்டும். படிக்கும் வயதில் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்தி மற்றவர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும். தேர்வு நேரத்தில் மாணவர்களுக்கு பயம் வரக்கூடாது என்பதற்குத்தான் இந்த யாகம் நடத்தப்பட்டது. இந்த யாகத்தின் மூலம் சரஸ்வதி தேவியின் சக்தி இந்த பேனாவிலும் இருக்கும். போருக்கு செல்லும் வீரர்களுக்கு ஆயுதம் போல், தேர்வுக்கு செல்லும் உங்களுக்கு இந்த பேனா ஆயுதமாக இருக்கும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ புரம் இயக்குனர் சுரேஷ் பாபு, ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மைய இயக்குனர் பாலாஜி, அறங்காவலர் சௌந்தர்ராஜன், ஸ்ரீ நாராயணி பீடம் வேளாளர் சம்பத், சக்தி அம்மாவின் வெளிநாட்டு, உள்நாட்டு பக்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



▶ எஸ்.ஆர்.எம். வேளாண்மை கல்லூரியின் வேளாண் துறையில் இளம் அறிவியல் 4 ஆம் ஆண்டு படிக்கும் மாணவிகள், பேராசிரியர் டாக்டர் ஆர்.ஏஞ்சலின் சில்வியா தலைமையில் "கிராம தங்கல்" திட்டத்தின் கீழ் சித்தாமூர் ஒன்றியம் கிராமத்தில் தங்கியுள்ளனர். விவசாய மக்களுக்கு வேளாண்மை பற்றி விழிப்புணர்வையும், தங்களுக்கு தெரிந்த விஷயங்களையும் தெரிவிக்கின்றனர். கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பேரம்பாக்கம் கிராமத்தில் அவர்கள் பயிற்சி திட்டத்தை நடத்தினர். டாக்டர் ஏஞ்சலின் சில்வியாவின் வழிகாட்டுதலின் கீழ், உள்ளூர் விவசாயிகளுக்கு செங்குத்து விவசாயம் மற்றும் மண் மாதிரிகள் எடுப்பது பற்றி கற்றுக் கொடுத்தனர். இறுதியாக மாணவிகள் மனோஜிகா, காயத்திரி, சங்கர கோமதி, கிரேசி, பூஜா, பூஜா பிரியா, சாரு கிருஷ்ணா, ரோஜா, பாலிகா, சினேகா அம்ருதா, ஹேமா வர்ஷா, மோனிகா ஆகியோர் இச்செய்முறை விளக்கத்திற்கு பேரம்பாக்கம் விவசாய மக்கள் காட்டிய ஆர்வத்தை பாராட்டி நன்றியை தெரிவித்துக் கொண்டனர்

## ஆற்காடு தொழிலதிபர் ஏ.வி.எஸ். சாரதி பிறந்தநாள்

# அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அன்னதானம், மற்றும் வஸ்திரம் வழங்கல்

ராணிப்பேட்டை, பிப். 27 -

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காட்டில் உள்ள கருமாரியம்மன் கோவிலில் ஆற்காடு தொழிலதிபரும், சமூக செயல்பாட்டாளர் மற்றும் திமுக மாவட்ட பொருளாளருமான ஏ.வி. எஸ்.சாரதி பிறந்த நாளை முன்னிட்டு கருமாரியம்மன் ஆலயத்தில் சிறப்பு அபிஷேக அலங்கார பூஜை சரவணன், பாபு, ஊ.ம.த. ராமன் தலைமையிலும், இளங்கோ, கார்த்தி, ஜெயராஜ், பாலு, ராஜசிவ்காந்தி மற்றும் நிர்வாகிகள் ரோஷன், வசந்த், ஹேமகுமார், தினேஷ் மற்றும் மகளிரணியினர் முன்னிலையில் நடைபெற்றது.



பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, அன்னதானம் வழங்கப்பட்டு, தாய்மார்களுக்கு வஸ்திரங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு புகைப்படக் கண்காட்சி- கமல்ஹாசனுக்கு அழைப்பு

சென்னை பிப்.27

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் பிறந்த நாளையொட்டி நாளை சென்னையில் புகைப்பட கண்காட்சி நடைபெறுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் பிறந்த நாளையொட்டி நாளை சென்னையில் புகைப்பட கண்காட்சி நடைபெறுகிறது. இந்த கண்காட்சியை திறந்து வைப்பதற்கான அழைப்பிதழை அமைச்சர் சேகர்பாபு நேற்று கமல்ஹாசனிடம் நேரில் வழங்கினார்.




ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது மேயர் பிரியா உடன் இருந்தார்.

# காட்பாடி ரயில் சந்திப்பு நிலையம் ரூ.329 மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணிகள் துவக்கம்

வேலூர், பிப். 27 -

வேலூர் மாவட்டம், காட்பாடியில் ரயில்வே சந்திப்பு நிலையம் அமைந்துள்ளது. காட்பாடி சந்திப்பில் தினமும் 100 க்கும் மேற்பட்ட ரயில்களும், 40 ஆயிரம் பயணிகள் வந்து செல்லும் இடமாக இந்த ரயில்நிலையம் உள்ளது.

**பிரதமர் மோடி அரசின் சாதனை**



இந்தியா முழுவதும் சில குறிப்பிட்ட ரயில் நிலையங்கள் பிரதமர் மோடி உத்தரவின்படி, சீரமைக்கப்பட நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. வேலூர் மாவட்டத்தில் காட்பாடி ரயில் சந்திப்பு நிலையத்தை மறுசீரமைக்க ரயில்வே துறை ரூ 329.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான ஆரம்ப பணி துவங்கி உள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

சென்னை, மற்றும் குர்கானில் உள்ள தனியார் ஒப்பந்த நிறுவனங்கள் இந்த பணியை 3 ஆண்டுகளுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பழைய கட்டிடங்கள் படிப்படியாக இடிக்கப்பட்டு தெற்கு மற்றும் வடக்கு முனையங்கள் அமைக்கப்பட உள்ளன. புதிய தொழில்நுட்பத்துடன் நான்கு மாடி அமைக்கப்படவுள்ளது. இதில் பயணிகள் உதவி மையங்கள், காத்திருப்பு மையம், முன்பதிவு பயணிகள் சீட்டு மையம், குழந்தைகள் பராமரிப்பு மையம், வணிக நிறுவனங்கள், நடைமேடை என கட்டப்படவுள்ளது. நவீன வசதிகளுடன் 258 கார் பார்கிங், 2,120 இருசக்கர வாகன நிறுத்துமிடம் கட்டப்படவுள்ளது.

வேலூர் மாவட்டத்திற்கு மேலும் ஒரு மகுடம் இந்த காட்பாடி ரயில்வே சந்திப்பு நிலையம். இந்த மகத்தான திட்டம் பாரத பிரதமர் மோடியின் தமிழகத்திற்கு மேலும் ஒரு சாதனை படைக்கும் வல்லமை படைத்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# அறந்தாங்கி செலக்சன் பள்ளியின் 22 ஆம் ஆண்டு விழா ஈரோடு மகேஷ் கலந்துகொண்டு சிறப்பித்தார்

அறந்தாங்கி , பிப். 27 -

அறந்தாங்கி செலக்சன் கல்வி குழுமத்தின் 22 ஆம் ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் பள்ளி தாளாளர் கண்ணையன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக விஜய் டிவி புகழ், நடிகர் ஈரோடு மகேஷ் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி. இன்றைய மாணவர்கள் எப்படி இலக்கை அடைய வேண்டும் என தன்னம்பிக்கை ஊட்டும் விதமாக பேசினார்.



நிகழ்வில் புதுக்கோட்டை வெங்கடேஷ்வரா கல்வி குழுமத்தின் தாளாளர் தங்கம் மூர்த்தி, அறந்தாங்கி ரோட்டரி கிளப் முன்னாள் தலைவர்கள் கராத்தே கண்ணையன், பீர் சேக், தட்சிணாமூர்த்தி, ஆறுமுகம், செயலாளர் கார்த்திக், பொருளாளர் ரூபன், உறுப்பினர்கள் வீரமாகாளியப்பன், விஜய்,போர்ட் சிட்டி ரோட்டரி கிளப் தலைவர் சரவணன், செயலாளர் கணேசன், பொருளாளர் கண்ணன், அறந்தாங்கி பல்வேறு பள்ளி தாளாளர்கள் ஐடியல் சேக் சுல்தான், தாயகம் ரமேஷ், சேக் அலாவுதீன், நாகராஜன், நகர் மன்ற உறுப்பினர்கள் சரோஜா,சங்கர் ,ராமசாமி,ராசு, தீன், ரூபினி ஆனந்த், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் நாராயணசாமி, காங்கிரஸ் நகர தலைவர் வீராசாமி, நிலையூர் ராஜா, பாலு, வர்த்தக கழகம் வரதராஜன், கிரீன் முகமது, மாணிக்கசுந்தரம், முகமது ஹாரிஸ் , திருச்சி மாவட்ட கவுன்சிலர் , ஆவுடையார் கோவில் முத்துராமலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர், முன்னதாக நிகழ்வில் குத்து விளக்கை இந்திராதேவி கண்ணையன், யோகராணி சுரேஷ் குமார், பள்ளி இருபால் பெற்றோர்கள், குழந்தைகள், பள்ளி ஆசிரியர்கள் என இணைந்து ஏற்றி வைத்தனர். அனைவரையும் பள்ளி முதல்வர் சுரேஷ் குமார் வரவேற்றார்.

நிகழ்ச்சிக்கு உண்டான ஏற்பாடுகளை பள்ளி துணை முதல்வர், தலைமை ஆசிரியை, ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் என அனைவரும் இணைந்து செய்து இருந்தனர். திரளாக பெற்றோர்கள், பொது மக்கள் என நிகழ்ச்சிகள் மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளுடன், நாடகம், மாணவர்களின் பல்வேறு சாகச திறமைகளுடன் நடைபெற்றது. ஒளி ஒலியை ரத்னா சவுண்ட் சிஸ்டம், வீடியோ காட்சிகள் பாபு, புகைப்படங்களை குமார், உள்ளிட்டவர்கள் செய்து இருக்க நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றது.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க கடந்த வெள்ளிக்கிழமை பால்வளத்துறை அமைச்சர் நாசர் மதுரை ஆவின் பால் பண்ணையில் ஆய்வு செய்தார். பால் மற்றும் பால் உப பொருட்கள் உற்பத்தி, அளவு, தரம் மற்றும் சீரான விநியோகம் ஆகியவற்றை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும் பால் மற்றும் பால் பொருட்கள் பொதுமக்களை விரைவில் தங்கு தடையின்றி சென்று சேர்ந்திட அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார், உடன் ஆவின் நிர்வாக இயக்குநர் சுப்பையன், மதுரை மாவட்ட ஆட்சியர் அனீஷ் சேகர், பொது மேலாளர் சாந்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்லைன்ஸ் பாண்டி, ஆலங்குளம் செல்வம் தி.மு.க உறுப்பினர், உற்பத்தி தரப் பரிசோதனை பிரிவு அதிகாரிகள் கலந்து கொண்டனர்



▶ புதுக்கோட்டையில் நடந்த மாநில அளவிலான சிலம்பம் சாம்பியன்ஷிப் -2023 பெண்களுக்கான துவக்க விழா போட்டியில் விழாவிற்கு தலைமை வகித்த எஸ்விஎஸ் குழுமம் தலைவர் ஜெயக்குமாருக்கு புதுக்கோட்டை டிஎஸ்பி ராகவி பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார்.

# ஆலங்குடி அருகே விவசாயிக்கு அரிவாள் வெட்டு

ஆலங்குடி, பிப். 27;

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே உறவினர் அரிவாளால் வெட்டியதில் விரல்கள் துண்டான நிலையில் விவசாயி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆலங்குடி அருகேயுள்ள பள்ளத்திவிடுதியைச் சேர்ந்தவர் ரெங்கசாமி மகன் கருப்பையா(25). அவரது தந்தை ரெங்கசாமியிடம் அவரது உறவினரான அதே பகுதியைச் சேர்ந்த எஸ். ரெங்கதுரை(45) என்பவர் மதுபோதையில் அடிக்கடி தகராறு செய்வாராம். இதேபோல நேற்றும் தகராறு ஏற்பட்டதாம். இதுகுறித்து கருப்பையா ரெங்கதுரையிடம் கேட்டதால், இருவருக்கும் தகராறு ஏற்பட்டு ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டனராம். அப்போது, ரெங்கதுரை தாக்கியதில் கருப்பையாவிற்கு காயம் ஏற்பட்டுள்ளது. இதில், ஆத்திரமடைந்த கருப்பையா அரிவாளால் ரெங்கதுரையை பல இடங்களில் வெட்டியதில் கைவிரல்கள் துண்டானதோடு, பலத்த காயமடைந்தார்.

இதைத்தொடர்ந்து, இருவரும் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மேல்சிகிச்சைக்காக ரெங்கதுரை மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து ஆலங்குடி போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதுக்கோட்டையில் இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடு

புதுக்கோட்டை பிப்.27-

வேங்கைவயலில் குடிநீர் தொட்டியை அசுத்தம் செய்த குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும் என இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுக்கோட்டை இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடு புதுக்கோட்டை கே.எம்.மஹால் திருமண மண்டபத்தில் நேற்று முந்தினம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில பொதுச் செயலாளர் பாஸ்கரன் தலைமை தாங்கினார். புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் எம்.என். ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். மாநில தலைவர் சங்கர், மாநில பொருளாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினர். கூட்டத்தில், கார்ல் மார்க்ஸ் சிந்தனையை பற்றி தமிழக கவர்னர் பேசியது கம்யூனிஸ்டுகளை அவமானப்படுத்தும் நோக்கமுடையதாகும். இதுபோன்ற அபத்தமான பேச்சுகளை அவர் நிறுத்திக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு பாரபட்சமின்றி நிவாரணம் வழங்க வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அதிகப்படுத்த வேண்டும். மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் மக்களுக்கு உடனடி பட்டா வழங்க வேண்டும்.

காமராஜபுரம், பாலன் நகர், எம்.கே.நகர், தொண்டைமான் நகர், போஸ் நகர், நரிமேடு ஆகிய பகுதிகளுக்கு தேர்தல் வாக்குறுதிப்படி உடனடியாக பட்டா வழங்க வேண்டும்.



மன்னர் ராஜகோபால தொண்டைமானுக்கு நினைவு மணிமண்டபம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் இடம் ஒதுக்கி கட்டித்தர வேண்டும். இறையூர் வேங்கை வயலில் மேல்நிலை நீர்த்தேக்க குடிநீர் தொட்டி அசுத்தம் செய்யப்பட்ட சம்பவத்தில் சி.பி.சி.ஐ.டி. போலீஸ் விசாரணைக்கு வரவேற்பதோடு, குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் காலதாமதம் நீடித்து வருவது கடும் அதிருப்தி நிலவுகிறது. குற்றவாளி யாராக இருந்தாலும் கைது செய்ய வேண்டும்.

புதுக்கோட்டை நகராட்சியில் அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த வேண்டும். புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும். சாலையோர வியாபாரிகள் 141 பேருக்கு வியாபார வண்டி வழங்க வேண்டும். மேலும், மாவட்டத்தில் அனைத்து பகுதி பேரூராட்சி, ஊராட்சிகளுக்கும் வண்டி வழங்க வேண்டும். இலவச பஸ் கிராமம் தோறும் முறைப்படி நிறுத்தி பள்ளி குழந்தைகளை ஏற்றி வருவதை மாவட்ட நிர்வாகமும், போக்குவரத்து துறையும் உறுதிப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

முன்னதாக நகர்மன்ற வளாகத்தில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு திருமண மண்டபத்தை வந்தடைந்தது. மாவட்ட துணை செயலாளர் சொர்ணகுமார் வரவேற்றார். முடிவில் நகர செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

# மீனவர்களின் பிரச்சனைக்கு விரைவில் சுமூக தீர்வு காணப்படும்: மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பேட்டி

சென்னை பிப்.27-

தமிழ்நாடு மீனவர்கள் தாக்கப்படுவது, கைது செய்யப்படுவதை தடுக்க இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் சுமூக தீர்வு காணப்படும் என ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, கைது செய்வது என இலங்கை கடற்படை தொடர்ந்து அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகிறது. இதற்கு பல்வேறு கண்டங்கள் எழுந்த நிலையிலும், இது போன்ற சம்பவங்கள் நடந்து வருகிறது.



இந்நிலையில், காரைக்கால், மயிலாடுதுறையை சேர்ந்த மீனவர்கள் 11 பேர் நேற்று முந்தினம் கடலுக்கு மீன்பிடிக்க சென்றுள்ளனர். அவர்களை இலங்கை கடற்படை தாக்கியதில் 3 மீனவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்கள் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில், மீனவர்கள் பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் சுமூக தீர்வு காணப்படும் என ஒன்றிய இணை அமைச்சர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, தமிழ்நாடு மீனவர்கள் தாக்கப்படுவது, கைது செய்யப்படுவதை தடுக்க இலங்கை அதிபர், மீன்வளத்துறை அமைச்சரை சந்தித்து பேசியுள்ளேன். ஏப்ரல் மாதம் இருநாட்டு மீனவ பிரதிநிதிகள் உடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு சுமூக தீர்வு விரைவில் கிடைக்கும். இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தாக்கப்படுவதற்கு நிரந்தர தீர்வு காணப்படும் எனவும் கூறியுள்ளார்.

# வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளதாக காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம் பேச்சு

சத்தீஸ்கர் பிப்.27-

வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல்திறன் மீது தனக்கு முழுமையான நம்பிக்கை இருப்பதாக கார்த்தி சிதம்பரம் எம்.பி. தெரிவித்துள்ளார்.



சத்தீஸ்கர் மாநிலம், ராய்பூரில் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் 85-வது மாநாடு நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில், தேர்தல், வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஜம்மு-காஷ்மீர் மாநில அந்தஸ்து உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பான 58 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் குறிப்பாக தேர்தல்களில் பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து 14-க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் பலர் தேர்தல் ஆணையத்திடம் சந்தேகம் எழுப்பியதாகவும், ஆனால் அதற்குதக்கபதில் கிடைக்கவில்லை என்றும் காங்கிரஸ் கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீது தனக்கு முழு நம்பிக்கை இருப்பதாக காங்கிரஸ் எம்.பி.யும், முன்னாள் மத்திய மந்திரி ப.சிதம்பரத்தின் மகனுமான கார்த்தி சிதம்பரம் கருத்து தெரிவித்துள்ளார். மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு நேற்று செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் கூறியதாவது; - "வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. இது எனது தனிப்பட்ட கருத்து. கட்சியின் நிலைப்பாடு வேறாக இருக்கலாம். அது குறித்து என்னால் பேச முடியாது. நான் துவக்கத்தில் இருந்தே இதை வலியுறுத்தி வந்திருக்கிறேன். வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலம் நடந்த தேர்தல்களில் நாம் வெற்றியும் பெற்றிருக்கிறோம். வாக்குப்பதிவு இயந்திரமானது நெட்வொர்க் தொடர்பு இன்றி தனித்து இயங்கக்கூடியது. அதன் செயல்திறன் மீது எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது." இவ்வாறு கார்த்தி சிதம்பரம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# ஊழியர்களை தொடர்ந்து ரோபோக்களை பணி நீக்கம் செய்யும் கூகுள் நிறுவனம்

வாஷிங்டன் பிப்.27-

கூகுளின் தாய் நிறுவனமான ஆல்பாபிட் தனது தலைமையகத்தில் உள்ள உணவகத்தில் சுத்தம் செய்யும் பணியை செய்து வரும் 100 ரோபோக்களை பணி நீக்கம் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



கூகுள் நிறுவன அலுவலக வளாகத்தில் கதவை திறப்பது, டேபிள்களை துடைப்பது, குப்பைகளை அகற்றுவது, நாற்காலிகளை வரிசைப்படுத்துவது என அன்றாட பணிகளை செய்ய ரோபோக்கள் களமிறக்கப்பட்டன. சுமார் 100 ரோபோக்கள் இந்த வேலையை செய்து வருவதாக தகவல் வெளியாகியது. ரோபோக்கள் எந்த மாரியான வேலையை செய்ய வேண்டும் என்பது அதில் பொருத்தப்படும் கம்ப்யூட்டர்களில் புரோகிராம்களாக எழுதப்பட்டு வடிவமைக்கப்பட்டன. இந்நிலையில், செலவைக் குறைப்பதற்காக உணவு விடுதி மேசைகளைச் சுத்தம் செய்யவும், குப்பைகளைத் தனித்தனியாகவும், கதவுகளைத் திறக்கவும் பயிற்சி பெற்ற ரோபோக்களை நீக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தகவல் தொடர்பு இயக்குனர் டெனிஸ் காம்போவா தெரிவிக்கையில், "தினசரி ரோபோக்கள் இனி எழுத்துக்களுக்குள் தனித் திட்டமாக இருக்காது. சில தொழில்நுட்பங்களும் குழுவின் ஒரு பகுதியும் கூகுள் ரிசர்ச்சில் இருக்கும் ரோபாட்டிக்ஸ் முயற்சிகளில் ஒருங்கிணைக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். மேலும், உலகெங்கிலும் உள்ள டுவிட்டர், மைக்ரோசாப்ட் மற்றும் யாகூ போன்ற நிறுவனங்கள் உட்பட தொழில்நுட்பத் துறை, பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் செலவுகளைக் குறைக்க கடந்த ஆண்டு முதல் பணிநீக்கங்களைச் சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தை குறித்து விவாதிக்க மாநில முதன்மை செயலாளர்கள் கூட்டம்

## மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

டெல்லி பிப்.27-

மாநில முதன்மை செயலாளர்களின் கூட்டத்திற்கு 3 வாரங்களுக்குள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் 2005-ன் படி, பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் காப்பகங்கள், பாதுகாப்பு அதிகாரிகள், சேவை மையங்கள் உள்ளிட்டவற்றை அமைக்க மத்திய, மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உத்தரவிட வேண்டும் எனக்கோரி, 'விதி விமன் ஆஃப் இந்தியா' என்ற அமைப்பு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.



இந்த மனு நீதிபதி ரவீந்திர பட், நீதிபதி தீபாங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தை செயல்படுத்துவது குறித்து விவாதிக்க மாநில முதன்மைச் செயலாளர்களின் கூட்டத்திற்கு மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் 3 வாரங்களுக்குள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர். இந்த கூட்டத்தில் நிதி, உள்துறை, சமூக நலன் ஆகிய துறைகளின் செயலாளர்களும், தேசிய மகளிர் ஆணையம், தேசிய சட்டப்பணிகள் ஆணையம் ஆகியவற்றின் தலைவர்களும் பங்கேற்க வேண்டும் என்று நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

# ஆலங்குடியில் தேங்காய் நார் தொழிற்சாலையில் தீவிபத்து

ஆலங்குடி, பிப். 27;

புதுக்கோட்டை மாவட்டம், தேங்காய் நாரில் இருந்து வில்லை தயாரிக்கும் தொழிற்சாலையில் நேற்று திடீர் தீ விபத்து ஏற்பட்டது.



ஆலங்குடி காமராஜர் சாலை பகுதியில் குமார் என்பவருக்கு சொந்தமான தேங்காய் நாரில் இருந்து வில்லை தயாரிக்கும் தொழிற்சாலையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த தேங்காய் நாரில் திடீரென தீப்பற்றியுள்ளது. தீ நாரில் முழுவதும் பரவி எரியத்தொடங்கியுள்ளது. இது குறித்து அங்கிருந்தவர்கள் அளித்த தகவலைத் தொடர்ந்து, அங்கு விரைந்து சென்ற ஆலங்குடி தீயணைப்பு நிலைய வீரர்கள் மற்ற பகுதிகளுக்கு தீ பரவாமல் தீயை அணைத்தனர். இதுகுறித்து ஆலங்குடி போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பூமியை விட்டு ஆண்டுக்கு 3.8 சென்டிமீட்டர் தூரம் விலகி செல்லும் சந்திரன்

வாஷிங்டன் பிப்.27-

தற்போது சந்திரன் பூமியிலிருந்து ஆண்டுக்கு 3.8 சென்டிமீட்டர் தூரம் விலகிச் செல்வதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

பூமியைச் சுற்றி வரும் ஒரே கோள் சந்திரன் மட்டுமே. முன்னதாக, ஈர்ப்பு விசையின் காரணமாக சந்திரன் பூமியிலிருந்து நிலையான தூரத்தில் இருப்பதாக கருதப்பட்டது, ஆனால் புதிய கண்டுபிடிப்பு சந்திரனைப் பற்றி பல கேள்விகளை எழுப்பியுள்ளது. நாசாவின் கூற்றுப்படி, சந்திரன் பூமியிலிருந்து மெதுவாக ஆண்டுக்கு 3.8 செ.மீ தூரம் விலகி செல்வதாக இங்கிலாந்தை சேர்ந்த நியூஸ் இணையதளம் ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, பண்டைய மனித நாகரிகங்களால் காலெண்டராக பயன்படுத்தப்பட்டதால், சந்திரன் நேரத்தை அளவிடுவதில் ஒரு முக்கிய பகுதியாக இருந்தது. இருப்பினும், சமீபத்திய கண்டுபிடிப்பு, கடந்தகால கண்டுபிடிப்புகள் பற்றி நிறைய கேள்விகளைக் கொண்டு வந்துள்ளது என்று இண்டி100 இணையதளம் தெரிவித்துள்ளது. 'மிலன்கோவிச் சுழற்சிகள்' சந்திரன் பூமியிலிருந்து விலகிச் செல்வதற்குக் காரணமாக இருக்கலாம் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

பூமியில் கிடைக்கும் சூரிய ஒளியின் அளவு அதன் காலநிலையைப் பாதிக்கிறது. இந்த சுழற்சிகளும் அவற்றின் அதிர்வெண்களும் சந்திரனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரத்தையும் தீர்மானிக்கின்றன. விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, சந்திரன் அதன் தற்போதைய தூரத்தை விட சுமார் 2.46 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமிக்கு 60,000 கிமீ நெருக்கமாக இருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரியலூரில் டிடீவி திருமண மஹால் திறப்பு விழா

அரியலூர் பிப்.27-

அரியலூரில் டிடீவி திருமண மஹால் திறப்பு விழா மற்றும் அதில் உருவாக்கப்பட்டுள்ள, ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

அரியலூர் - கல்லங்குறிச்சி சாலையில், அயன் ஆத்தூர் கிராமத்தை சேர்ந்த, தனவேல்-பச்சையம்மாள் ஆகியோரால் புதிதாக கட்டப்பட்டுள்ள, டிடீவி திருமண மஹால் திறப்பு விழா, மற்றும் திருமண மண்டப வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ள, ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய கும்பாபிஷேக விழா நடைபெற்றது.




அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா, புதிய திருமண மண்டபத்தை திறந்துவைத்து, அங்குமுதல் நிகழ்வாக நடைபெற்ற வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி திருமண உற்சவத்திலும் பங்கேற்றார்.

இவ்விழாவில், திமுக பிரமுகர் மணக்குடி பாலு, பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், வணிகர்கள், பொதுமக்கள் மற்றும் திருமண மண்டப உரிமையாளர் தனவேல் உறவினர்கள் உட்பட, ஏராளமானோர் பங்கேற்றனர்.

# தேசிய மாணவர் படையில் சிறந்த என்சிசி அலுவலராக புதுக்கோட்டை மன்னர் கல்லூரி உதவி பேராசிரியர் தேர்வு

**புதுக்கோட்டை பிப்.27-**

தேசிய மாணவர் படையில் சிறந்த (என்.சி.சி) அலுவலராக புதுக்கோட்டை மன்னர் கல்லூரி உதவி பேராசிரியர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



புதுக்கோட்டை மா.மன்னர் கல்லூரி, வேதியியல்துறை உதவிப் பேராசிரியரும், தேசிய மாணவர் படை, தரைப்படைப்பிரிவு அலுவலருமான லெப்டினண்ட். பகுத்தறிவாளன், திருச்சி மண்டலத்திற்குட்ட 12 மாவட்டங்களிலிருந்து, சிறந்த என்.சி சி.அலுவலராக, என்.சி.சி. மாணவர்களுக்கு சிறப்பாக பயிற்சி அளித்தது, சமூகப் பணி மற்றும் சமுதாய வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை வழங்கியது உட்பட அனைத்து என்.சி.சி. நடவடிக்கைகளிலும் சிறப்பாக பணியாற்றியதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குரிய பாராட்டுச் சான்றிதழை, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் என்.சி.சி. இயக்குனரகத்தின் தலைவர் கம்மோடர் அட்டுல் குமார்ரஸ் கோதி வழங்கினார். லெப்டினண்ட் பகுத்தறிவாளனுக்கு கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

# தென்காசி மாவட்டம் புளியங்குடியில் இலவச மருத்துவ முகாம்

தென்காசி பிப்.27-

தென்காசி மாவட்டம் புளியங்குடி ஆர். சி. சர்ச் உலக மீட்பர் ஆலயத்தில் புளியங்குடி நகர காங்கிரஸ் கமிட்டி, மக்கள் உதவி கூட்டமைப்பு மற்றும் குலசேகரம் ஸ்ரீ மூகாம்பிகை மருத்துவ கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்தும், இதயம் மற்றும் பொது அறுவை சிகிச்சை எலும்பு முறிவு, காது, மூக்கு, தொண்டை, குழந்தைகள் நல இலவச சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.



தலைமை அருட்தந்தை அருள்ராஜ், முன்னிலை ஆர். சி. பங்கு தந்தை பால்ராஜ் தலைவர் நகர காங்கிரஸ் கமிட்டி புளியங்குடி, செய்யது சாகுல் ஹமீது மக்கள் உதவி கூட்டமைப்பு புளியங்குடி, கோமதிநாயகம் மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர், சங்கரநாராயணன் மாவட்ட காங்கிரஸ் பிரதிநிதி, சாகிர் உசேன் காங்கிரஸ் சிறுபான்மை துறை மாவட்ட துணைத் தலைவர், மகேந்திரன் வாசு வட்டார காங்கிரஸ் தலைவர், ஊராட்சி மன்ற தலைவர் ராமநாதபுரம், சக்கரவர்த்தி மாநில செயலாளர் தமிழ்நாடு காங்கிரஸ் வழக்கறிஞர் அணி, ஜோசப் அமல்ராஜ் செயலாளர் ரோட்டரி கிளப் ஆப் புளியங்குடி, ஆகியோர் கலந்துகொண்டனர். இலவச மருத்துவ முகாமில் 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்று சென்றனர்.

# பாகிஸ்தான் நிதி நெருக்கடியில் இருந்து மீள பிரதமர் மோடி உதவக்கூடும்

## ரா உளவு அமைப்பின் முன்னாள் தலைவர்

டெல்லி பிப்.27-

பாகிஸ்தான் நிதி நெருக்கடியில் இருந்து மீள இந்தியா உதவும் என நான் தனிப்பட்ட முறையில் கருதுவதாக ரா உளவு அமைப்பின் முன்னாள் தலைவர் அமர்ஜித் சிங் தெரிவித்தார்.



இலங்கையை போலவே பாகிஸ்தானும் கடுமையான பொருளாதார நெருக்கடியில் தவித்து வருகிறது. சர்வதேச நாணய நிதியமும் பாகிஸ்தானுக்கு நிதி உதவிகளை அளிக்க பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. வரலாறு காணாத நெருக்கடியால் தவிக்கும் பாகிஸ்தானில் அத்தியாவசிய பொருட்களின் விலை கூட விண்ணை முட்டும் அளவுக்கு உள்ளது. இந்த நிலையில், பாகிஸ்தான் நிதி நெருக்கடியில் இருந்து மீள இந்தியா உதவும் என நான் தனிப்பட்ட முறையில் கருதுவதாக ரா உளவு அமைப்பின் முன்னாள் தலைவர் அமர்ஜித் சிங் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமர்ஜித் சிங் கூறியதாவது: - பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த கிடைக்கும் அனைத்து நேரமும் சிறந்த நேரம் தான். நமது அண்டை நாட்டுடன் பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்த வேண்டும். இன்னும் சில மாதங்களில், இந்தாண்டு இறுதியில் பிரதமர் மோடி பாகிஸ்தானுக்கு உதவுவார் என்பதே எனது கணிப்பு. அங்கிருந்து எனக்கு வந்த உளவுத் தகவல் இல்லை. இது எனது தனிப்பட்ட கணிப்பு. பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தை நடத்தும் விவகாரத்தில் உள்நாட்டு அரசியல் எப்போதும் ஆதிக்கம் செலுத்துகிறது" என்றார்.

# திருச்சி, சேலம், நெல்லையில் மெட்ரோ அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு பணிகள் மேற்கொள்ளும் மெட்ரோ ரயில் நிர்வாகம்

சென்னை பிப்.27-

கோவை, மதுரையில் மெட்ரோ அமைப்பதற்கான ஆய்வு பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

திருச்சி, சேலம், நெல்லை மாவட்டங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறு ஆய்வு பணிகள் ஒரு சில மாதங்களில் இறுதி செய்யப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. தலைநகர் சென்னையில் முதல்கட்டமாக 54 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரயில் சேவை செயல்பாட்டில் உள்ளது. சென்னையை போல் தமிழகத்தின் பிற முக்கிய நகரங்களான கோவை, மதுரை, சேலம், திருச்சி, நெல்லையிலும் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்தப்பட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோவை, மதுரையில் மெட்ரோ அமைப்பதற்கான ஆய்வு பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில், சேலம், திருச்சி, நெல்லை ஆகிய நகரங்களில் மெட்ரோ ரயிலுக்கான சாத்தியக்கூறு ஆய்வு பணிகள் வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இறுதி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஆலங்குடி அருகே மாங்கோட்டையில் வடமாடு மஞ்சுவிரட்டு

ஆலங்குடி பிப்.27-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா மாங்கோட்டையில் கிராம பொதுமக்கள் மற்றும் இளைஞர்களால் நான்காம் ஆண்டு வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 11 காளைகள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு காளையை அடக்க 9 வீரர்களைக் கொண்ட குழு அனுமதிக்கப்பட்டது.



கறம்பக்குடி வட்டாட்சியர் ராமசாமி வீரர்களுக்கு உறுதிமொழி ஏற்று வைத்து வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியை தொடங்கி வைத்தார். போட்டியில் வெற்றி பெற்ற காளைகளுக்கும் காளைகளை அடக்கிய வீரர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆலங்குடி காவல்துறை துணை கண்காணிப்பாளர் தீபக் ரஜினி மற்றும் காவல் துறையினர் செய்திருந்தனர். வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியில் திரளான பார்வையாளர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

# கிரிப்டோகரன்சி குறித்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தகவல்

பெங்களூரு பிப்.27-

கிரிப்டோ கரன்சிக்கு கட்டுப்பாடுகளை கொண்டு வருவது தொடர்பாக ஆலோசித்து வருவதாக, மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.



கிரிப்டோ கரன்சிக்கு கட்டுப்பாடுகளை கொண்டு வருவது தொடர்பாக, இந்தியா தலைமையிலான ஜி20 கூட்டமைப்பு ஆலோசித்து வருவதாக, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். கர்நாடக மாநிலம் பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கிரிப்டோகரன்சி குறித்து ஆய்வு செய்து வருவதாகவும், ஜி20 கூட்டமைப்பு கிரிப்டோ குறித்து விரிவான விவாதம் மேற்கொள்ளும் என்றார்.

கிரிப்டோ போன்ற மெய்நிகர் சொத்துக்களில் மறைந்துள்ள அபாயங்களை உணர்ந்துள்ள ஜி20 நாடுகள், அதற்கு விரிவான கொள்கையை உருவாக்க விரும்புவதாகவும் கூறினார்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# திருவப்பூர் ஜல்லிக்கட்டு போட்டியில் தண்ணீரில் தத்தளித்த காளைகள்

# குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு





# தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் மூன்று பேர் படுகாயம்


சென்னை / புதுக்கோட்டை | 27.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

27.02.2023 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பி. எஸ். எடியூரப்பா , இந்திய அரசியல்வாதி (பி.1943)



புருனோ சோரெசு , பிரேசிலிய டென்னிசு வீரர் (பி.1982)



சந்தீப் சிங் , இந்திய வளைதடிப் பந்தாட்ட வீரர் (பி.1986)



## இன்றைய நினைவு நாள்

சந்திரசேகர ஆசாத் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1906) (இ.1931)



சுஜாதா , தமிழக எழுத்தாளர் (பி.1935) (இ.2008)



நானாஜி தேஷ்முக் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1916) (இ.2010)



பன்னாட்டு அரசு சார்பற்ற அமைப்புகளின் நாள்